# சுதந்திரன்
SUTANTIRAN

விலை சதம் 35.

வள்ளுவர் ஆண்டு 2007 ஆடி 27 | ஷஃபான் 14 | (11-8-76) புதன் புத்தகம் 30 | இதழ் 35


# சத்தியசீலன் மயங்கி விழுந்தார்!

## தர்மலிங்கம் பா. உ. தந்தி!

பாதுகாப்பு வெளி விவகார துணையமைச்சர் லக்ஸ்மன் ஜெயக்கொடிக்கு உடுவில் பா. உ. திரு. வி. தர்மலிங்கம் பின்வரும் தந்தியொன்றை அனுப்பி வைத்துள்ளார்:—

“உண்ணாவிரதமிருக்கும் தமிழ் இளைஞர்கள் பாலும் குளுக்கோசும் குடிப்பதாகவும் சுகமாகவிருப்பதாகவும், நீங்கள் வீரகேசரி 9-8-76 இதழுக்கு அளித்திருந்த செய்தியை படித்து ஆச்சரியமடைந்தேன். உங்களுக்குத் தவறான தகவல் தரப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. எங்களுக்குக்கிடைத்த தகவலின்படி, சத்தியசீலன் என்ற உண்ணாவிரதமிருக்கும் இளைஞர், நீர்கொழும்புச் சிறையில் மயங்கிவிழுந்திருக்கிறார். சிறையதிகாரிகள் அவருக்கு வலுக்கட்டாயமாக பாலைப் பருக்கியபோது, அதை அவர் ஏற்கமறுத்து கீழே துப்பிவிட்டார். ஏனைய இடங்களில் உண்ணாவிரதமிருக்கும் இளைஞர்களின் நிலைபற்றி எமக்குத் தகவல் ஏதும் இல்லை. அவர்கள் உண்ணாவிரதத்தை தொடங்கியதை மட்டுமே யறிவோம். அவர்களது தற்போதைய நிலைபற்றி நாமெல்லோரும் கவலையடைந்துள்ளோம்.

“இந்த இளைஞர்களுக்கு உணவூட்டுவதற்கு சிறையதிகாரிகள் பலாத்காரம் பாவிப்பதை அனுமதிக்கக்கூடாது.

“மறைப்பதற்கு எதுவும் இல்லையென்றால் எதற்காக உறவினர்களும், பெற்றோர்களும் அவர்களைச் சென்று பார்க்கக் கூடாது என்று தடைவிதித்துள்ளீர்கள்? பாராளுமன்ற உறுப்பினர்களும், பெற்றோர்களும் இவர்களைச் சென்று பார்வையிட அனுமதியுங்கள்! உண்ணாவிரதமிருக்கும் இளைஞர்களின் உடல்நிலைபற்றி ஒழுங்கான தகவல்கள் பொதுமக்களுக்கு தரப்படவேண்டும். தாமதமின்றி இதற்குப் பதில் தருக!”

## இருட்டறையில் வசந்தகுமார்!

வெலிக்கடையிலிருந்து கண்டிபோகம்பரைச் சிறைக்கு மாற்றப்பட்டுள்ளமட்டு நகரைச்சேர்ந்த வசந்தகுமார் என்ற இளைஞர் வயிற்றுக்கோளாறு காரணமாக அவதிப்படுகிறாராம். அவ்வரை தனிமைப்படுத்தி, இருட்டறையில் பூட்டி அடைத்து வைத்திருந்தனர். இந்த இளைஞர் 14.8-76 சனி முதல் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கத்திட்டமிட்டுள்ளார். இப்போது இவரை சிறை அலுவலகத்தில் வைத்திருக்கிறார்கள்.

# ஈழவிடுதலை இயக்கத் தலைவரையும் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவரையும் இணைத்து வைத்தது சிங்கள அரசு!

தமிழ் இளைஞர்பேரவைத் தலைவர் கவிஞர் காசிஆனந்தனையும், தமிழ் இளைஞர் பேரவையிலிருந்து பிரிந்துசென்று ஈழவிடுதலை இயக்கம் அமைத்த முத்துக்குமாரசுவாமியையும் மீண்டும் ஒன்றாக இணைத்து வைத்தது சிங்கள அரசு. ஆம், காசிஆனந்தனும், முத்துக்குமாரசுவாமியும் ஒரே சங்கிலியில் பிணைக்கப்பட்டு வெலிக்கடைச் சிறையிலிருந்து மாத்தறை சிறைக்கு கூட்டிச்செல்லப்பட்டனர். அங்கு இருவரும் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கின்றனர்.

# சட்டமறுப்பில் புதிய திருப்பம்!

## ஆகஸ்ட் 12-ல் அடுத்த நடவடிக்கை!

தமிழர் விடுதலைக்கூட்டணியின் போராட்டக் குழு புதிய புரட்சிகரமான சட்டமறுப்புத் திட்டமொன்றை உருவாக்கியுள்ளது, இச் சட்டமறுப்பு நடவடிக்கை இதற்கு முந்திய நடவடிக்கைகள் போலன்றி முற்றிலும் மாறுபட்டதாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இச்சட்ட மறுப்பு இயக்கம் எதிர்வரும் ஆகஸ்ட் 12ம் நாளன்று நடைபெறும் என்று தெரியவருகிறது.

தமிழர்விடுதலைக் கூட்டணியின் போராட்டக்குழு சென்ற 6-8-76 வெள்ளிக்கிழமை மாலை யாழ்ப்பாணத்தில் கூடி சட்டமறுப்புத் திட்டத்தை இறுதியாக அங்கீகரித்தது. நீதியான ஒரு கோரிக்கையை முன்வைத்து சிறைச்சாலைகளில் தமிழ் இளைஞர்கள் நடத்திவரும் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஆதரவாகவும் அவர்களது நியாயமான கோரிக்கையை நாடறியச்செய்யவும் இந்த ஆகஸ்ட் 12 சட்டமறுப்பு நடவடிக்கைகள் அமையும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணிப் போராட்டக் குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

## இன்றுடன் எத்தனை நாட்கள்?

* காசிஆனந்தன்,
* சேனாதிராசா,
* முத்துக்குமாரசாமி,
* சத்தியசிலன்
* திசைவீரசிங்கம்

**சாகும்வரை உண்ணாவிரதம் ஆரம்பித்து இன்று 7வது நாள்!**

* வண்ணை ஆனந்தன்
* வரதராசா
* சிறீஸ்கந்தராசா
* பூபதிபாலவடிவேற்கரன்

**சாகும்வரை உண்ணாவிரதம் ஆரம்பிதது இன்று 4வது நாள்!**

# “எனதுமகன் செய்த குற்றமென்ன?”

## பிரதமரிடம் தமிழ்த் தாய்மார்கள் கேள்வி!

‘எனது மகன் என்ன குற்றம் செய்தான்? அவனை எதற்காக சிறையில் அடைத்துவைத்திருக்கிறீர்கள்? அவன் இப்போது மேற்கொண்டிருக்கும் உண்ணாவிரதத்தின்பயனாக அவனுக்கு ஏதாவது தீங்கு நேர்ந்தால், அதற்கு முழுவதும் நீங்களும் உங்கள் அரசாங்கமுமே பொறுப்பேற்கவேண்டும்.”

—இவ்வாறு கூறும் அவசரத்தந்திகளை மாவை சேனாதிராசாவின் தாயார் திருமதி தையல்நாயகி சோமசுந்தரமும், சத்தியசீலனின் தாயார் திருமதி கண்மணி பொன்னுத்துரையும் பிரதமருக்கு அனுப்பியுள்ளனர்.

இவர்கள் அடித்த தந்திகள் தபால்வேலை நிறுத்தம் காரணமாக பிரதமரிடம் போய்ச்சேரத் தவறிவிடக் கூடும் என்று இவர்களிருவரும் அச்சம் தெரிவித்ததன் காரணமாக இத்தந்திகளின் பிரதிகளை உடுவில் பா. உ. திரு. வி. தர்மலிங்கம் பிரதமரின் அலுவலகத்தில் நேரடியாகக் கையளித்தார்.

நீர்கொழும்புச் சிறையில் ஆகஸ்ட் 5ம் நாளிலிருந்து சாகும்வரை உண்ணாவிரதமிருந்துவரும் திரு. சத்தியசீலனின், தாயார் பிரதமருக்கு அடித்த தந்தியில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

எனது மகனை கடந்த மூன்றரை ஆண்டுகளாக எதுவித விசாரணையுமின்றி தொடர்ச்சியாக சிறையில் வைத்திருக்கிறீர்கள் இப்படி நீங்கள் அவனது வாழ்வோடு அநியாயமாக விளையாடுவதற்கு காரணமென்ன? அவன் என்ன குற்றம் செய்தான்? குற்றமேதும் செய்திருந்தால் நீதிமன்றத்தில் நிறுத்தலாமே! இப்போது அவன் உங்கள் [illegible] உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருக்கிறான். இந்த உண்ணாவிரதத்தினால், அவனுக்கு ஆபத்து நேருமானால் இதற்கான முழுபொறுப்பும் உங்களையே சாரும்!”

மாவை சேனாதிராசா கண்டி கிங்ஸ் வீதி சிறையில் ஆகஸ்ட் 5 முதல் உண்ணாவிரதம் இருந்துவருகிறார். அவரது தாயார் திருமதி தையல்நாயகி சோமசுந்தரம், பிரதமருக்கு அனுப்பிவைத்துள்ள தந்தி வருமாறு:—

“எனது மகனை 1973ம் ஆண்டு மார்ச் மாதம் கைது

—4-ம் பக்கம் பார்க்க

## வரதராசா சிறீஸ்கந்தராசா உண்ணாவிரதம் ஆரம்பம்!

கண்டி போகம்பரைச் சிறையில் திட்டமிட்டபடி வரதராசாவும், சிறீஸ்கந்தராசாவும் தங்கள் உண்ணாவிரதத்தை 8-8-76 காலையில் தொடங்கினர். இதற்கு முன்னர் சிறைச்சாலையதிகாரியிடம் அவர்கள் கையளித்த கடிதம் ஒன்றில் உண்ணாவிரதத்தின் பயனாக தாங்கள் இறந்தால் தங்கள் உடலை வீட்டுக்கு அனுப்பி வைக்கும்படி கோரியுள்ளனர்.

# இளைஞர்கள் எங்கே

## பிரதமரிடம் செல்வா கேள்வி!

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், சர்வதேச மன்னிப்புச் சபைபோன்றவற்றின் உள்ளூர்பிரதிநிதிகள் சிறைச்சாலைகளுக்கு சென்று, அங்கு சாகும்வரை உண்ணாவிரதமிருக்கும் தமிழ் இளைஞர்களின் உடல் நிலை குறித்து உடனுக்குடன் அறிவிப்பதற்கு

—4-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா வடக்கில் சிங்கள ஆக்கிரமிப்பு! தமிழ்மண் பறிபோகிறது! தமிழினமே விழித்தெழு!

வவுனியா வடக்கில் நடைபெறும் சிங்களவரின் ஆக்கிரமிப்பு திட்டமிட்ட செயலா அல்லது தெரியாத்தனமாக நடைபெறுகின்றதா? என்ற கேள்வி ஒவ்வொரு தமிழனுடைய உள்ளத்திலும் எழுகின்றது. வவுனியா வடக்கில் இரண்டு திசைகளால் சிங்களவரின் ஆக்கிரமிப்புத் தொடர்ந்து கொண்டு வருகின்றது. பதவியாவில் வசிக்கும் சிங்களவர்கள் கொஞ்சம் கொஞ்சமாகவந்து இன்று வவுனியா வடக்கு எல்லைக்குள்வந்து விட்டார்கள். அவர்கள் காடுகளை அழித்துப் பயிர் செய்கின்றார்கள். அரசாங்கத்துக்குச் சொந்தமான காடுகளை அழித்துப் பயிர் செய்வதற்கு அவர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதா? அப்படியாயின் யாரால் எப்போது வழங்கப்பட்டது.

ஒரு தமிழன் குடியிருக்க நிலமில்லாமல் தப்பித்தவறி ஒரு ஏக்கர் அரசாங்கக் காட்டை அழித்துவிட்டால் கத்தி, கோடாரிகள் பறித்தெடுக்கப்படுகின்றன. சட்டத்தின் பெயரால் தண்டனையும் வழங்கப்படுகின்றது. அதேநேரம் சிங்களவர்கள் நூற்றுக்கணக்கான ஏக்கர்கள் அரசாங்கக் காடுகளை அழித்து பயிர் செய்கின்றனர். அதைத் தடுப்பதற்கும் ஆள் இல்லை. கேட்பதற்கும் எவருமில்லை. இதற்குக் காரணம் என்ன? முன்னவன் தமிழன் ஆளும் இனத்தால் அடக்கி — ஒடுக்கி அடிமையாக்கப்பட்டிருப்பவன். பின்னவன் ஆளும் இனத்தைச் சேர்ந்தவன் என்பதுதானா?

நெடுங்கேணியில் இருந்து பத்துமைல் தொலைவிலுள்ள தமிழ் பல்கலைக்கழக இயக்கத்தினரால் நடாத்தப்படும நாவலர் தோட்டத்திலிருந்து சிறிதுதூரம் காட்டுக்குள் சென்றுபார்த்தால் சிங்களவர்கள் எவ்வளவு காடுகளை அழித்துள்ளார்கள் என்பது தெரிகின்றது. நிலைமை தொடர்ந்து இப்படியே போனால் நாவலர் தோட்டம் அடுத்தவருடம் தமிழனிடம்தான் இருக்குமோ என்பது சந்தேகம். சூரியனாறு என்னுமிடம் இனி என்ன சிங்களப் பெயருடன் விளங்குமோ தெரியவில்லை. கரியக்குண்டான் என்னுமிடத்தையும் சிங்களவர்கள் நெருங்கிவிட்டார்கள். ஒதியமலை என்னுமிடத்தை அடுத்துள்ள கென்பாம் (F)புராணிபாம் போன்றவற்றின் பின்புறங்கள் சிங்களவரினால் கைப்பற்றப்பட்டுவிட்டது. ஒவ்வொரு வருடமும் நூற்றுக்குமேற்பட்ட ஏக்கர் அரசாங்கக் காணிகளை அழிக்கின்றார்கள் பயிர் செய்கின்றார்கள். அடுத்தவருடம் முன்னர் அழித்தகாடுகளை விட்டுவிட்டு மீண்டும் புதிதாகக் காடுகளை அழித்துப் பயிர் செய்கின்றார்கள். காடுகளை அழித்து அதைத் தங்கள் நிலம் என்று கூறித் தமிழ் நிலத்தைப் பறிப்பதுதானா இவர்கள் நோக்கம்?

சிங்களவர்கள் அரசாங்கக் காடுகளை அழித்துப் பயிர் செய்ய வேண்டாம் என்று நாம் கூறவில்லை. அதே நேரத்தில் தமிழனை அரசாங்கம் ஏன் தடுக்கின்றது. இதைத் திட்டமிட்ட செயல் என்று சொல்லாமல் தெரியாத்தனம் என்று எப்படிச் சொல்லமுடியும். அடுத்துச் சிங்களவர்கள் காடுகளை அழித்துப் பயிர் செய்ய வேண்டுமானால் சிங்களப் பிரதேசங்களில் அரசுக்குச் சொந்தமான நிலங்கள் இல்லையா? தமிழனுக்குச் சொந்தமான தமிழ் மண்ணைத்தானா ஆக்கிரமிக்க வேண்டும். சிங்களப் பிரதேசத்திலுள்ள காடுகளை அழித்துப் பயிர் செய்தால் பயிர் வளராதா? பலன் கிடைக்காதா?

ஒரு தமிழன் அரசுக்குச் சொந்தமான நிலத்தில் குடியிருந்தால் இருபத்துநாலு மணிநேரத்தில் வெளியேற வேண்டும் என்று சட்டங்கள் போடும் அதிகாரிகள் சிங்களவன் என்றதும் ஏன் கண்ணை மூடிக்கொண்டிருக்கின்றார்கள். இன்று இலங்கையிலே தமிழனுக்கு ஒரு நீதி சிங்களவனுக்கு ஒரு நீதியா? ஓ...தமிழன் ஆளப்படுகின்றவன் சிங்களவன் ஆளுகின்றவன். அப்படியானால் நீதி நியாயத்திலும் வேறுபாடு இருக்கத்தானே வேண்டும்? அதுதானே சோசலிசம்? அதுதானே ஜன நாயகம்? அதுதானே முற்போக்குத்தனம்? இதை உணராமல் ஏதோ உளறி விட்டேன்.

— நவம்
நெடுங்கேணி

## பட்டிருப்புத் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணி அமைபபுக்குழு அறிக்கை!

மட்டக்களப்புஅம்பாரை மாவட்டக்கிளையுடன் தற்காலிகமாக ஒத்துழைக்க முடியாதென்று 18-7-76ல் பட்டிருப்புத்தொகுதிக் கிளை தீர்மானித்ததையிட்டு 21-7-76 ஆகிய திகதிகளில் வீரகேசரி நாளிதழில் வெளியானசெய்திகளுக்குஉண்மை விளக்கம் கொடுக்கும் முகமாக அதன் அமைப்புக் குழுத் தலைவர் திரு. நா. முத்துப்பிள்ளையும் செயலாளர் திரு. த. கணேசபிள்ளையும் கூட்டாகவிடுத்த அறிக்கை வருமாறு:-

"எங்கள் தொகுதி (பட்டிருப்பு) அமைப்புக் குழு தலைமைப் பீடத்தினால் உரிய முறைப்படி தெரிவுசெய்யப்பட்டு தனது கடமையை நேர்மையாகச்செய்து வருகின்றது, ஆனால் எங்களுக்குப் பணிக்கப்பட்ட படி முறைப்படி கிராமங்கள் தோறும் புதுக்கிளைகளை அமைத்தும், இருக்கும் கிளைகளைப் புனருத்தாரணம்செய்தும் அவற்றில் இருந்து தொகுதிக் கிளைக்குப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்து தொகுதிக்கிளைகளை நிறுவ வேண்டும். அன்றில் இருந்து இக்குழு செயற்படமுடியாததொன்றாகும். அதுவரை இக் குழுத் தொகுதியின் கூட்டணி சம்பந்தமான சகல விடயங்களிலும் பூரண அதிகாரமுடையது. இதை எவரும் மறுக்கமுடியாது.

18-6-76ல் திருமதி லீலா இராசமாணிக்கம் அவர்கள் வீட்டில் கூடிய கூட்டத்தில் பதின்மூன்று அங்கத்தவர்களில் ஒன்பதுபேர் சமூகத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. இதற்கு எதிராகவோ மாறாகவோ எவரும் ஒருவார்த்தை தானும் பேசவில்லை.

### தீர்மானம்

'மட்டக்களப்பு,அம்பாறை மாவட்ட த. வி. கூ. கிளை ஒழுங்கான முறையில் அமைக்கப்படவில்லை என்று நாங்கள் கருதுகின்றோம். மேற்படி கிளை ஒழுங்காக அமைக்கப்படும்வரை நாங்கள் அதனுடன் ஒத்துழைக்க முடியாத நிலையில் இருக்கின்றோம். எனவே தலைமைக் காரியாலயம் எம்முடனான தொடர்புகளை நேரடியாக வைத்துக் கொள்ள வேண்டும்'

21-6.76ம் திகதி வீரகேசரியில் இப்பிரேரணை சம்பந்தமாக விவரித்துக் கூறப்பட்டவை முழுவதும் பொய்யும் உண்மைக்கு மாறானவையுமென்பதைத் திட்டவட்டமாகக்கூறிக்கொள்ளவிரும்புகிறோம்.

3-8-76வீரகேசரியில் வெளிவந்ததின்படி எங்கள் அமைப்புக்குழுவின் அதிகாரத்தை வரையறுக்கவும்,மட்டிடவும் அதையிட்டு அறிக்கைவிடவும் தனிப்பட்ட ஒரு குழு அங்கத்தவருக்கு — அதுவும் தானும் சமூகமாக இருந்து ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றிய அங்கத்தவருக்கு சிறிதும் உரிமை இல்லை என்றும் இந்த இரண்டு அறிக்கைகள் சம்பந்தமாகவும் கூடியவிரைவில் அமைப்புக் குழு கூடி நியாயமான வகையில் நடவடிக்கையெடுக்க இருக்கிறதென்றும் அதுவரை பொது மக்கள் இந்தப் பிழையான அறிக்கைகளைக்கொண்டு பரபரப்படையாமல் இருக்குமாறு த. வி. கூ. அமைப்புக்குழு உங்களை கேட்டுக்கொள்ளுகிறது"

## கிளிநொச்சி தொகுதியில் கிளைகள் அமைப்பு

தமிழர் விடுதலைக் கூட்டணியினதும் தமிழ் இளைஞர்பேரவையினதும் கிளைகள் கிளிநொச்சி தொகுதியில் துரிதமாக அமைக்கப்பட்டுவருகின்றன. இதன் பிரகாரம் அண்மையில் முரசுமோட்டை, தர்மபுரம் ஆகிய கிராமங்களில் இக்கிளைகள் கருத்தரங்குடன் அமைக்கப்பட்டன. கிளிநொச்சி பா. உ. வீ. ஆனந்தசங்கரி அவர்களும் மற்றும் ஐ. திருஞானம், க. ஏகாம்பரம், விஸ்வமடு ஜெயபாலன் ஆகியோரும் கிளை அமைப்புக் கருத்தரங்குகளில் கலந்துகொண்டு உரையாற்றினர். தெரிவுசெய்யப்பட்ட செயற்குழு பின்வருமாறு.

### தர்மபுரம் கூட்டணிக் கிளை

தலைவராக திரு. செ. புஷ்பராசாவும் துணைத்தலைவர்களாக திருவாளர்கள் இ. தங்கராசா, மு. செல்வரத்தினம் ஆகியோரும், செயலாளராக திரு. மு. சிவஞானசுந்தரமும், உபசெயலாளராக திரு. மா. இலட்சுமணனும் பொருளாளராக திரு. சி. கனகராசாவும் செயற்குழு உறுப்பினர்களாக திருவாளர்கள்: க. குணசிங்கம், ந. பாலசுந்தரம், இ. பிரான்சிஸ், வே. இராசு, அழகரத்தினம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

### தர்மபுரம் இளைஞர் பேரவைக் கிளை

தலைவராக திரு. மு. செல்வரத்தினமும் உபதலைவராக சி. கிருஷ்ணராசாவும் செயலாளராக திரு. சத்தியசீலனும் பொருளாளராக திரு. சாமிநாதனும் இ. தியாகராசாவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

### முரசுமோட்டை த. வி. கூட்டணிக்கிளை

தலைவராக திரு. நா. கந்தையாவும் துணைத்தலைவர்களாக திருவாளர்கள் மாணிக்கவாசகர், திருநாவுக்கரசு ஆகியோரும்செயலாளராக திரு.த. செல்லையாவும், துணைச்செயலாளராக திரு. இ. இராசசேகரனும், பொருளாளராக திரு. கா. செல்லையாவும், செயற்குழு உறுப்பினர்களாக திருவாளர்கள் கீதபொன்கலன், கணபதிப்பிள்ளை, குணபாலசிங்கம், சின்னப்பு நாயகம், அம்பலவாணர், பரமேஸ்வரன், கிருஷ்ணபிள்ளை ஆகியோரும் தெரிவாயினர்.

### முரசுமோட்டை இளைஞர் பேரவை கிளை

தலைவராக திரு. நா. கணபதிப்பிள்ளையும் உபதலைவராக திரு. சி. குணபாலசிங்கமும் செயலாளர்களாக வே. மாணிக்கவாசகர், சி. அம்பலவாணர் ஆகியோரும் பொருளாளராக பரமேஸ்வரனும் செயற்குழு உறுப்பினர்களாக செல்லத்துரை சுந்தரலிங்கம், [illegible]ரன், கீத பொன்கலன் ஆகியோரும் தெரிவாகினர்.

## சித்தாண்டி தமிழ் மகளிர் பேரவை

தமிழ் மகளிர் பேரவையின் கிளையொன்று அண்மையில் சித்தாண்டியில் அமைக்கப்பட்டது. பின்வருவோர் நிர்வாகிகளாக தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவி. செல்வி. பி. கமலாவதி, துணைத்தலைவி: செல்வி. சு. சரோஜாதேவி, செயலாளர்: செல்வி. துளசிமணி, துணைச்செயலாளர்: செல்வி. த. சாரதாதேவி, பொருளாளர்: செல்வி. த. மகாலட்சுமி. செயற்குழு உறுப்பினர்கள்: செல்விகள் சு. தங்கநாயகி, பி. சரசம்மா, திருமதிகள் [illegible] இ. பாக்கியம், ஐ. நாகம்மா, சே. சிதேவிப்பிள்ளை, [illegible] கனிப்பிள்ளை.

## வவுனியாவில் 3 நாட்கள் உண்ணாவிரதம்

9-8-76 திங்கக் கிழமை அதிகாலை 6மணி தொடங்கி தமிழர் விடுதலைக் கூட்டணி பிரமுகர் திரு. தா. சிவசிதம்பரம் அவர்களும் ஐந்நூறு கூட்டணித் தொண்டர்களும் தண்ணீரூற்று ஊற்றங்கரை விநாயர் ஆலயத்தில் மூன்று தினங்கள் தொடர்ந்து அனுதாப உண்ணாவிரதம் அனுட்டித்து வருகின்றனர்.

சிறையில் இறக்கும்வரை உண்ணாவிரதம் அனுட்டிக்கும் இளைஞர்களை உடனடியாக விடுதலைசெய்யவேண்டும் அல்லது நீதிமன்றத்திற்குகொண்டு வரவேண்டும் என்ற கோரிக்கையை 5000 பொதுமக்களின் கைச்சாத்துடன் பிரதமமந்திரிக்கு அனுப்பி வைப்பதற்கு ஏற்பாடுகள் நடைபெறுகின்றது. மாணவர்கள் குறித்த மூன்று தினங்களும் பாடசாலைகளைப் பகிஸ்கரிக்கின்றனர்.

இதனைத்தொடர்ந்து வவுனியாப் பட்டணஎல்லைக்குள் உள்ள விநாயர் ஆலயத்தில் 14-8-76 சனிக்கிழமை பல நூற்றுக்கணக்கான தொண்டர்களுடன் மூன்று தின உண்ணாவிரதம் மேற்கொள்ளுவதற்கு வேண்டிய ஒழுங்குகளை வவுனியா மாவட்ட தமிழர் கூட்டணியினர் ஒழுங்குசெய்கின்றனர்—

## புத்தளம் மக்களின் அன்பளிப்பு!

சிறையிருக்கும் தமிழ் இளைஞர்களின் குடும்ப உதவி நிதிக்காக புத்தளத்திலுள்ள முஸ்லிம் பொதுமக்களிடமும், தமிழ் மக்களிடமும் புத்தளம் தமிழ்பேசும் இளைஞர் மன்றம் திரட்டிய நிதி ரூபா337-சதம் 55, அண்மையில் மேற்படி [illegible] பொருளாளர் திரு. க. செல்வராஜாவினால், சுதந்திரன் ஆசிரியரிடம் கையளிக்கப்பட்டது. இப்பணத்தை சுதந்திரன் ஆசிரியர், இந்நிதிக்குப் பொறுப்பான உடுவில் பா. உ. வி. தர்மலிங்கரிடம் ஒப்படைத்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**"சிறையில் விசாரணையின்றி நீண்டகாலமாக வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் இப்போது தங்களை தாங்களே வருத்திக்கொண்டு உயிரை விடும் உண்ணாவிரதத்திலீடுபட்டிருக்கிறார்கள். எந்தத் தமிழனின் உயிரும் வீணாகப்போவதற்கு நாம் விட்டுவிடக்கூடாது. இந்த இளைஞர்களின் உயிரைக் காப்பாற்றுவதற்கு நாம் போராட வேண்டும்."**

# 'உண்ணாவிரதமிருக்கும் இளைஞர்களின் உயிரைக் காப்பாற்ற போராடுவோம்!'

## கொழும்பில் தந்தை செல்வா உருக்கமான பேச்சு!

—இவ்வாறு மருதானை கப்பித்தாவத்தை சிறீ பாலசெல்வ விநாயகர் ஆலயத்தில் தமிழ் இளைஞர் பேரவையின் கொழும்புக்கிளையினரால் நடத்தப்பட்ட ஒரு நாள் அடையாள உண்ணாவிரதத்தை முடித்துவைத்து பேசிய தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் மூதறிஞர் தந்தை செல்வா குறிப்பிட்டார்.

6-8-76 வெள்ளிக்கிழமை அதிகாலைமுதல் இரவு 8 மணி வரை இந்த அடையாள உண்ணாவிரதம் நடைபெற்றது. சாகும்வரை உண்ணாவிரதம்மேற்கொண்டுள்ள தமிழ் இளைஞர்களின் கோரிக்கைக்கு அனுதாபமும் ஆதரவும் தெரிவித்து நடைபெற்ற இந்த உண்ணாவிரதத்தில் தமிழ் இளைஞர் பேரவையின் கொழும்புக் கிளை, தமிழ் மகளிர்பேரவை கொழும்புக்கிளை, தமிழ் தொழிற்சங்கக் கூட்டணி, அரசாங்க எழுதுவினைஞர் சங்கம், புகைவண்டிப் பகுதி ஊழியர் சங்கம் ஆகியவற்றின் உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். காலையில் திரு. மு. சிவசிதம்பரம்அவர்களினல் தொடக்கி வைக்கப்பட்ட இந்த உண்ணாவிரதத்தை மாலையில் மூதறிஞர் செல்வா, திரு. மு. திருச்செல்வம் கியூ. சி. ஆகியோர் முடித்து வைத்தனர். பக்திப் பாடல்களுடனும், கவிஞர் காசி ஆனந்தனின் பாடல்களுடனும் இந்த உண்ணாவிரதம் நடைபெற்றது.

உண்ணாவிரத முடிவில், தமிழ் இளைஞர்பேரவையின் கொழும்புக் கிளைத் தலைவர் ஆ. ரகுபதிபாலசிறீதரனின் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில், தந்தை செல்வா மேலும் கூறியதாவது:-

"சிறையில் சாகும்வரை உண்ணாவிரதமிருக்கப்போவதாக எனது அனுமதியைக் கேட்டு சில இளைஞர்கள் சொல்லியனுப்பிய போது நான் அதற்கு இணங்கவில்லை. ஏனெனில் எந்தத் தமிழனின் உயிரும் வீணே போகக் கூடாது. உண்ணாவிரதமிருக்கும் இளைஞர்களை எப்படியாவது நாம் காப்பாற்ற வேண்டும்; அதற்கான நடவடிக்கைகளையெடுக்கவேண்டும்."

திரு. மு. சிவசிதம்பரம் பேசுகையில்— உண்ணாவிரதமிருக்கும் இளைஞர்களுக்கு ஏதாவது அசம்பாவிதம் நேர்ந்தால், நாம் எவ்வளவுதான் அஹிம்சை பேசினலும் எம்மையும் மீறி தமிழ் இளைஞர்கள் தீவிரபோராட்டத்தில் குதிப்பார்கள்; அப்படியொரு நிலை ஏற்படுமானல், அரசாங்கமே அதற்குபொறுப்பு ஏற்கவேண்டும் என்று கூறினர்.

சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன் பேசுகையில்—சிறையில்உண்ணாவிரதமிருக்கும் இளைஞர்களை அரசு உடன் உயிருடன் விடுதலைசெய்யவேண்டும். அவர்களைப் பிணமாக்கி வெளியே தருமானல் — அதன் விளைவுகள் பாரதூரமாகும். கட்டுப்பாடுகளையெல்லாம் மீறி தமிழ் சமூகம் பொங்கியெழுந்து போராடும். வாழ்ந்தால் ஒன்ருக வாழ்வோம்— வீழ்ந்தால் ஒன்ருக வீழ்வோம்' என்று கூறினர்.

திரு. ஈழவேந்தன் பேசுகையில்—அரசியல் பிழைக்கும் அம்மையாரின் ஆட்சியை, அறத்தை தழுவி உண்ணு நோன்பில் ஈடுபட்டிருக்கும் இளைஞர்களின் ஆன்மீகச்சக்தி சுட்டுப் பொசுக்கும் என்ருர்.

கரிகாலன் பேசுகையில்—அடக்குமுறைகளால், இலட்சிய உணர்வுகளை அடக்கியொடுக்கிவிட முடியாதென்ருர்.

ஐ. தி. சம்பந்தன் பேசுகையில்—காந்தி காட்டிய வழியில், சத்தியப்போராட்டம் நடத்தும் இளைஞர்கள் இறுதியில் வெற்றி காண்பது நிச்சயம் என்ருர்.

தலைமைவகித்த இரகுபதி பாலசிறீதரன் பேசுகையில் —உண்ணாவிரதம் எவ்வளவு சக்திவாய்ந்த ஆயுதம் என்பதை அரசு இப்போது உணர்ந்துவருகிறது; எமது சகோதரர்களின் உண்ணாவிரதம் காரணமாக அரசு நடுங்குகிறது என்ருர்.

காங்கேசன்துறை தமிழ் மகளிர் பேரவையைச் சேர்ந்த செல்வி. கலைநிதி தேவாவும் பேசினர்.

---

# 'ஊழ்வினைவந்து உறுத்தும்' என்பதை மறவாதீர்! உண்ணாவிரதமிருக்கும் இளைஞரை விடுதலைசெய்க!

## பிரதமருக்கு ஈழத்தமிழ் எழுத்தாளர் பேரவை கடிதம்!

**ஆகஸ்ட் 5ம் நாளிலிருந்து சிறைகளில் சாகும்வரை உண்ணாவிரதமிருந்துவரும் தமிழ் இளைஞர்கள் தொடர்பாக ஈழத் தமிழ் எழுத்தாளர் பேரவையின் சார்பில் அதன் தலைவர் ஈழவேந்தனும், இணைச்செயலாளர்கள் கோவை மகேசன், அருள் மா. இராசேந்திரம் ஆகியோரும் கூட்டாக பின்வரும் அவசரக் கடிதத்தை பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ளனர்.**

"எதுவித காரணமும் இன்றி விசாரணையேதுமின்றி ஆண்டுக்கணக்காக சிறையில் அழுந்திவரும் தமிழ் இளைஞர்கள், அரசிடம் இருந்து நீதி கிடைக்கும் என்று எதிர்பார்த்து ஏமாந்த நிலையில் ஆகஸ்ட் 5ம் திகதி தங்கள் இறுதி வழியாக தங்களைத்தாமே வருத்தி சிங்கள ஆட்சிபீடத்தினதும் சிங்களப் பெருமக்களினதும் மனச்சாட்சியை தட்டியெழுப்பும் ஒருவித முறையாக சாகும்வரை "உண்ணு நோன்பினை மேற்கொண்டுள்ளார்கள்.

ஆணவத்தோடு ஆளும் அதிகார வர்க்கத்திற்கு எதிராக காந்தி அடிகள் கடைப்பிடித்த அறத்தின் அடிப்படையில் அமைந்த ஆயுதமே இவ்வுண்ணு நோன்பாகும்.

"உண்ணுநோன்பு மேற்கொண்ட இவ்விளைஞர்களின் உறுதியை தளரச்செய்ய அரசு அவர்களை நாட்டின் வெவ்வேறு சிறைகளில் தனித் தனியே" அடைத்து வைத்தபோதும் இவர்களின் உள்ள உறுதியையோ ஒன்றுபட்டு செயற்படும் தன்மையையோ தடுக்கமுடியவில்லை என்பதை தாங்கள் உணர வேண்டும்.

"ஊழ்வினை வந்து உறுத்தும் எனும் தத்துவம் புத்த மதத்தின் அடிப்படைத் தத்துவம். ஆகவே அம்மதத்தை தழுவி நிற்கும் தாங்கள் புத்தபெருமானின் போதனையைப் புறக்கணித்து செயலாற்றுவீர்களாயின் தாங்கள் ஏவிவிடும் கணையே தங்களைத் திருப்பித்தாக்கும் என்ற உண்மையை உணர்ந்து தங்கள் தவறை திருத்திக்கொள்ள இன்றும் காலம் செல்லவில்லை என்று மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேம்.

கூட்டுச்சேரா மாநாடு இத்தமிழ் இளைஞர்களின் பிணத்தின் மீதுதான் நடைபெற வேண்டும் என்பது நிச்சயம் தங்கள் விருப்பமாக இருக்க முடியாது. உலகின் உன்னத கருத்துக்களை புறக்கணித்து எந்த நாட்டின் அரசும் உய்வடைந்ததில்லை என்பது வரலாறு உணர்த்தும் உண்மையாகும்.

"ஆகவே தங்களிடம் ஓர் நல்ல முடிவை எம் ஈழத் தமிழ் எழுத்தாளர் பேரவை எதிர்பார்க்கிறது.

---

# 'பாலஸ்தீனியர்களைப்போலவே மலையகத் தமிழர்களும் பொங்கியெழுந்து போராடும் காலம் அதிக தூரத்தில் இல்லை!"

## இ. தொ. கா. பொதுச் செயலாளர் பேச்சு

**பா**லஸ்தீனியர்கள் தாம் பரம்பரையாக ஆண்டு அனுபவித்துவந்த மண்ணிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள் பாரம்பரிய புகழ்மிக்க [illegible]இனத்தினர் திடீர் அகதிகளாயினர். அவர்கள் நாதியற்று அலைந்துதிரிய வேண்டியதாயிற்று. அதனுல் அவர்களின் உள்ளத்தில் வீரம் பொங்கியது. அதன் பிரதிபலிப்புத்தான் இன்று அவர்கள் நடத்தும் துணிகரமான விடுதலைப் போராட்டங்கள். பாலஸ்தீனியர்களை வெறும் போடுதடிகளாக கருதியவர்கள் எல்லாம் இன்று அவர்கள் நடத்தும் போராட்டங்களைக்கண்டு பிரமிப்படைகிருர்கள்.

"பாலஸ்தீன அகதிகளின் நிலையில்தான் இன்று மலையகத்தமிழர் வாழ்கிருர்கள். இரத்தத்தை வியர்வையாக்கி, காடுகளை கழனிகளாக்கிய அவர்கட்கு சொந்தமாக ஒரு அங்குல நிலமும் இல்லை. அகதிகளாக விரட்டியடிக்கப்படுகிருர்கள் பலர். இருப்பவர்களுக்கோ மிருகங்களைவிடக் கேவலமான நிலை. இந்த [illegible] கப்போவது இல்லை [illegible] கத்தமிழர் இன்று விழிப்புணர்ச்சி பெற்றுவிட்டார்கள். அவர்களும் பாலஸ்தீனியர்களைப்போல போராடும் காலம் விரைவில்தோன்றும். பாலஸ்தீனியர்கள் கொதித்தெழுவதுபோல அவர்களும் கொதித்தெழுவார்கள். அப்படி கொதித்தெழும்போது அதன் விளைவு பாரதூரமானதாக இருக்கும்!"

—இவ்வாறு கொழும்பு தமிழர் விடுதலைக்கூட்டணிக் கிளையின் கருத்தரங்கில் [illegible] திரு. செ. பரராசசிங்கம் கூறினர்.

---

## உண்ணாவிரதக் கவிதை

ஆண்டவரே உம்மை நோக்கி — எம்
ஆன்மாவை எழுப்பினேம்

எமது விதியை இறைவா மாற்றுவீர்
எமது கதியை கட்டுப்படுத்தும்
எமது நாடு எம்மிடம் சேர
எமது இறைவனே எமக்கருள்வீரே

கவிமழை பொழியும் காசி அண்ணன்
வண்ணை சேனதி இன்னும் இளைஞர்
இன்னல் அகல இறைவா அருள்வாய்
ஈழத்தமிழர்கள் வாழ்ந்திட அருள்வாய்

செந்தமிழ் இளைஞர் சிறையினில் அழிய
பைந்தமிழ் உலகில் பாழ்படலாமோ
நொந்து அழுது நேர்ந்தோம் இறைவா
இந்த வேளையில் நீ அருள்வாயோ

ஆண்டவர் நாங்கள் அவனியில்முன்பு
ஆளுதல் மீண்டும் பிழையோ குறையோ
அந்நியர் விலங்கில் அன்னை தமிழோ?
அடிமை விலங்கற அருளாய் இறைவா.

தந்தை செல்வா காட்டிய வழியில்
தனயர் நாங்கள் செல்ல அருள்வாய்
முந்தைய ஈழம் முயன்று பெறுவோம்
முடிவு கண்டிட மூச்சையும் விடுவோம்.

— நாவண்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

## ● ஒரு சிறையதிகாரியின் திமிர்!

சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ள இளைஞர் ஒருவரிடம் உண்ணாவிரதத்தைக் கைவிடும்படி சிறையதிகாரி ஒருவர் நயமாக பல மணிநேரம் சொல்லிப்பார்த்தாராம். இளைஞர் தனது உறுதி நிலையிலிருந்து அசைந்து கொடுக்கவில்லையாம். முடிவில் ஆத்திரம் கொண்ட, அந்த சிறையதிகாரி, 'உன்னை யாருமே கவனிக்கப்போவதில்லை; தெருநாய் சாப்பிட வழியின்றி நடுரோட்டில் செத்துக் கிடப்பதைப்போல் நீயும் சாகப் போகிறாய்' என்று திமிர்த்தனமாக ஏசினாராம்!

### ● நல்லூரில் ஆயிரக்கணக்கானோர்

# அடையாள உண்ணாவிரதம்!

## குழப்ப முயன்ற துரோகிகள் ஓடி ஒதுங்கினர்!

**சிறையில் தமிழ் இளைஞர்கள் மேற்கொண்டிருக்கும் சாகும்வரை உண்ணாவிரதத்துக்கு அனுதாபம் தெரிவித்து தமிழர் விடுதலைக் கூட்டணியினால் நல்லூரில் ஒழுங்கு செய்யப்பட்ட மாபெரும் பொதுஜன உண்ணாவிரதத்தில் ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் பங்குபற்றினர். இந்த உண்ணாவிரதத்தை முறியடிப்பதற்கு நல்லூர் பா. உ. அருளம்பலத்தின் கையாட்கள் எடுத்த நடவடிக்கைகள் அனைத்தும் பொது மக்களினால் முறியடிக்கப்பட்டன.**

தமிழர் விடுதலைக் கூட்டணியினால் ஒழுங்குசெய்யப்பட்ட இந்த மாபெரும் பொதுஜன உண்ணாவிரதம் 9-8-76 திங்கள் காலையிலிருந்து நல்லூர் வீரமாகாளியம்மன் ஆலய முன்றலில் ஆரம்பமாகி மாலை வரை நடைபெற்றது. இந்த உண்ணாவிரதத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சகல வடபகுதி பா. உ.க்களும், பிரமுகர்களும், தமிழ் மகளிர் பேரவை, தமிழ் இளைஞர் பேரவை ஆகியவற்றின் உறுப்பினர்களும் ஏராளமான மாணவ, மாணவிகளும் ஆண்களும், பெண்களும் கலந்துகொண்டார்கள். பக்திப்பாடல்களையும், தமிழுணர்ச்சிப் பாடல்களையும் பாடியபடி இந்த உண்ணாவிரதத்தில் அவர்கள் கலந்துகொண்டார்கள்.

இந்த பொதுஜன உண்ணாவிரதத்தை முறியடிப்பதற்கு திட்டமிட்ட அருளம்பலத்தின் ஏவலாட்கள் கோவில்வாயிலில் முதல் நாளிரவே வந்து உட்கார்ந்து நிறைவெறியுடன் வாயில்வந்த தூஷண வார்த்தைகளையெல்லாம் பேசிக்கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். இவர்களின் தொகை ஏறத்தாழ 30பேர் இருக்கும். 9-8-76 காலையில் தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர்கள் உதயசூரியன்கொடியை ஏற்றி, உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கவே, குடிபோதையுடன் வெறிபிடித்து ஆடிய அத்துரோகிகள் ஒருபுறமாக ஒதுங்கினர். அருளம்பலத்தின் படத்தையும் கையில் வைத்துக்கொண்டு, "அருளம்பலத்தை கொல்ல எத்தனித்தார்கள்" என்று ஒருவர் எழுந்து வெறியில் பிதற்ற கூடியிருந்தவர்கள், அதைக் கைதட்டி மகிழ்ச்சியுடன் வரவேற்று மகிழ்ந்தார்கள். பின்னர் அங்கிருந்து நழுவினார்கள்.

துரோகிகளின் பித்தலாட்டத்தை முறியடித்து நடந்த இந்த உண்ணாவிரதம் தமிழ் மக்கள் மத்தியில் புதிய எழுச்சியையும் விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்தி விட்டது.

## இளைஞர்கள் எங்..

—1-ம் பக்கத் தொடர்

**அனுமதிக்கப் படவேண்டுமென்று பிரதமருக்கு தமிழர் கூட்டணித் தலைவர் மூதறிஞர் செல்வா அனுப்பியுள்ள அவசரக் கடிதமொன்றில் கோரியுள்ளார்.**

அக்கடிதத்தில் தந்தை செல்வா மேலும் எழுதியுள்ளதாவது:-

"சிறைச்சாலையில் தமிழ் இளைஞர்கள் சிலர் சாகும் வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டுள்ளதாகவும், அவர்களை கொழும்பிலிருந்து வேறு சிறைகளுக்கு மாற்றிவிட்டதாகவும் அறிகிறேன்.

"இந்த இளைஞர்கள் இருக்குமிடங்களையும் இவர்களது உடல் நலம் பற்றியும் அறிய இவர்களது உறவினர்கள் ஆவல் கொள்ளுவது இயற்கையே.

ஆகவே இந்த இளைஞர்கள் ஒவ்வொருவரும் எங்கே வைக்கப்பட்டுள்ளனர் என்பதையும், அவர்களது உடல் நலம் குறித்தும் எனக்கு உடனடியாக தகவல் தரும்படி கோருகிறேன். இந்த இளைஞர்களை அவர்களது பெற்றோரும் உறவினர்களும், வைத்தியர்களும் சென்று பார்க்கவும் உடனடியாக வசதிசெய்து கொடுங்கள்!"

## இன்று கருத்தரங்கு

கொழும்பில் தமிழரசுத் தந்தையின் இல்லத்தில் நடைபெறும் வாராந்தக் கருத்தரங்கு இன்று (11-8-76) புதன்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறும். சாகும்வரை உண்ணாவிரதமிருக்கும் இளைஞர்களின் நிலைபற்றி இக்கருத்தரங்கில் எடுத்துச்சொல்லப்படும்.

## எனது மகன்...

—1-ம் பக்கத் தொடர்

செய்து இங்கு இரண்டு ஆண்டுகள் விசாரணையின்றி சிறைவைத்திருந்துவிட்டு பின்னர் 1975 தொடக்கத்தில் விடுதலை செய்தீர்கள். மீண்டும் 1975 ஆகஸ்டில் கைதுசெய்து கடந்த ஓராண்டாக விசாரணையின்றி சிறையில் வைத்திருக்கிறீர்கள். இப்படி அவனை நீங்கள் கைதுசெய்வதற்கும் சிறையில் அடைப்பதற்கும் அவன் என்ன குற்றம் செய்தான் என்பதை நீதிமன்றத்தில் தெரிவிப்பீர்களா? நீதிகோரி அவன் இப்போது குதித்திருக்கும் உண்ணாவிரதத்தினால் அவனுக்கு ஏற்படக்கூடிய தீமைகளுக்கு நீங்களே முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டும். நீங்களும் ஒருபெண்—ஒரு தாய் என்ற முறையில் ஏனைய தாய்மார்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்வீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்!"

## சிறையில் இயங்கும் உண்ணாவிரத நடவடிக்கைக் குழு!

**காசி** ஆனந்தன், மாவை சேனாதிராசா, பொ. சத்தியசீலன், வண்ணை ஆனந்தன், சிறீஸ்கந்தராசா ஆகிய ஐந்துபேர் கொண்ட நடவடிக்கைக்குழுதான் சிறைச்சாலையில் சாகும்வரை உண்ணாவிரதத்துக்கு பொறுப்பாக இருக்கிறது. இந்தஐந்துபேரும் முறையே மாத்தறையிலும், கண்டியிலும், நீர்கொழும்பிலும் காலியிலும் போகம்பரையிலுமாகப் பிரித்து வைக்கப்பட்டுள்ளனர். உண்ணாவிரதத்தை கைவிடுவதென்று முடிவு எடுப்பதானாலும், அல்லது வேறு எந்த முடிவு எடுப்பதானாலும், இந்த ஐவரில் தனியொருவருக்கோ, அல்லது ஏனைய நால்வருக்குமோ அதிகாரம் கிடையாது. இந்த ஐந்து பேரையும் ஒன்றாக ஓரிடத்தில் சேர்த்தால் மட்டுமே அவர்கள் இதுசம்பந்தமாக ஒரு முடிவுக்கு வருவார்களாம்.

## காலியில் விசேட பூசை!

காலிச்சிறையில் வைக்கப்பட்டிருக்கும் வண்ணை ஆனந்தன், 8-8-76 ஞாயிற்றுக்கிழமை காலை தமது சாகும்வரை உண்ணாவிரதத்தை ஆரம்பித்தசமயம், அவருக்கு பலத்தையும், ஆன்மீக சக்தியும் அருளுமாறு கோரி காலியிலுள்ள சிறீமீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில், காலியிலுள்ள தமிழ் வர்த்தகர்களால் விசேட பூசையும் அபிஷேகமும் பிரார்த்தனையும் செய்யப்பட்டன.

## இளைஞர் பேரவையின் துண்டுப்பிரசுரம்!

"பொறுத்தது போதும் பொங்கியெழு தமிழா-செய் அல்லது செததுமடி" எனும் தலைப்பில் சிறையில் சாகும் வரை உண்ணாவிரதமிருக்கும் தமிழ் இளைஞர்களின் கோரிக்கைக்கு ஆதரவாக தமிழ் இளைஞர்பேரவையின் கொழும்புக் கிளை துண்டுப் பிரசுரமொன்றை பல்லாயிரக் கணக்கில் அச்சிட்டு பொதுமக்களுக்கு விநியோகித்து வருகிறது. கொழும்பில் நடைபெறும் வேல்விழாவின்போது இப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டதுடன், சிறையிருக்கும் தமிழ் இளை[illegible] கிளையினர் உண்டியலும் குலுக்கினர்.

## இளைஞர் அளித்தபதில்!

சிறையில் சாகும்வரை உண்ணாவிரதமிருக்கும் இளைஞர் ஒருவரிடம் சிறையதிகாரியொருவர் சென்று, காசிஆனந்தன், சேனாதிராசா என்பவர்கள் சாப்பிட்டுவிட்டார்கள் — சிறை ஆணையாளர் அறிவித்துள்ளார்; நீயும் சாப்பிடு, என்று கூறினாராம். அதற்கு அந்த இளைஞர், ஐந்து பேர் கொண்ட குழு இதற்குப் பொறுப்பாக இருப்பதாகவும், அந்த 5 பேர் கொண்ட குழுதான் சாப்பிடுவதா என்று முடிவு எடுக்கும்; அத்துடன் தனியொருவரோ, அல்லது நால்வரோ எடுக்கும் முடிவு பயனற்றது—அது என்னைக் கட்டுப்படுத்தாது — அத்துடன் உயர் அதிகாரியாக இருக்கும் நீங்கள் உண்மைக்கு மாறானவற்றை கூறவேண்டாம் என்று சுடச்சுடக் கூறிவிட்டாராம். இதயத்தால் இணைந்துவிட்ட இளைஞர்களிடம் ஆட்சியாளரின் சூழ்ச்சிபலிக்குமா?

## அவர்களுக்கும அனுமதிமறுப்பு!

சிறையில் உண்ணாவிரதமிருக்காத ஏனைய தமிழ் இளைஞர்களை வழமைபோல் சென்று பார்ப்பதற்கு அவர்களது பெற்றோர் சகோதரர்களுக்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

●

## சேனாதியை பாரகக அனுமதிமறுப்பு!

கண்டியில் சிறைவைக்கப்பட்டிருக்கும் உண்ணாவிரதி மாவை சேனாதிராசாவை சென்று பார்ப்பதற்கு அவரது சகோதரர் இராசரத்தினத்துக்கு சென்றவாரம் அனுமதி மறுக்கப்பட்டது. இதற்கென அவர் கண்டிக்கு சென்றிருந்தார்.

●

## பூபதி எங்கே?

உண்ணாவிரதமிருக்கும் தமது சகோதரர் பூபதிபாலவடிவேற்கரன் எங்கே வைக்கப்பட்டிருக்கிறார் என்பதை அறிவதற்கு வெலிக்கடை சிறையதிகாரிகளுடன் அவரது சகோதரர் ரகுபதிபால சிறீதரன் தொடர்பு கொண்டபோது, அதுபற்றி எதுவும் சொல்லமுடியாது என்று தெரிவிக்கப்பட்டதாம்.

நேரம் பெறுமதியானது

பணத்தையும் நேரத்தையும் மிச்சப்படுத்த "மில்க்வைற் சலவைப் பவுடர்" பாவியுங்கள்.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு-12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1976ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 11ந் திகதி புதன்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org